සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| දෙවන වාර පරීක්ෂණය | **2018** | **11 ශ්‍රේණිය** |
| **இரண்டாம் தவணைப் பரீட்சை** | 2018 | **தரம் 11** |
| **Second Term Test** | **2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **குடியியற் கல்வி** | **I** | **ஒரு மணி** |
| පුරවැසි අධ්‍යාපනය | **I** | පැයක් |
| ***Civics*** | **I** | **One Hour** |

பகுதி I

**கவனிக்கவும்.**

- சகல வினாக்களுக்கும் விடையளிக்குக.
- இலக்கம் 1-40 வரை (1), (2), (3), (4) எனத் தரப்பட்டுள்ள விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமானதை தெரிவு செய்க.
- உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் நீங்கள் தெரிவு செய்த விடையின் இலக்கத்தின் மேலால் புள்ளடி (x) இடுக.

(1) ஒரு நாட்டின் அடிப்படைச் சட்டம்

1) குடியியல் சட்டம் 2) அரசியல் யாப்புச் சட்டம்

3) குற்றவியல் சட்டம் 4) சர்வதேச சட்டம்

(2) சனாதிபதி அரசாங்க முறையின் விசேட பண்பு

1) நிறைவேற்றுத் துறையை நீக்குவதற்கு நீதித்துறைக்கு அதிகாரம் உள்ளது.

2) சட்டத் துறையினூடாக நிறைவேற்றுத் துறை தெரிவு செய்யப்படும்.

3) நிறைவேற்றுத்துறை சட்டத்துறைக்கு நேரடியாகப் பொறுப்புக்கூற வேண்டிய அவசியமில்லை

4) சட்டத்துறைக்கும் நிறைவேற்றுத் துறைக்கும் நேரடித் தொடர்பு காணப்படும்.

(3) இலங்கையில் மாகாண சபை ஒன்றுக்கான நிர்வாக அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது

1) பிரதேச நிருவாக சட்டத்தின் மூலம்

2) அரசியல் யாப்புச் சட்டத்தின் மூலம்

3) மாகாண சபைச் சட்ட மூலத்தின் மூலம்

4) பாராளுமன்ற சட்டமூலத்தின் மூலம்

(4) 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பில் குறிப்பிட்டுள்ளவாறு மாகாண சபையின் முதலமைச்சர் உட்பட அமைச்சரவை

1) ஐந்து பேர் உள்ளடக்கப்படுவர் 2) நான்கு பேர் உள்ளடக்கப்படுவர்

3) ஆறுபேர் உள்ளடக்கப்படுவர் 4) ஏழுபேர் உள்ளடக்கப்படுவர்

(5) காலி, மாத்தறை மற்றும் அம்பந்தொட ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியதாக உருவாக்கப்பட்டுள்ள மாகாணம்

1) தென் மாகாணம் 2) வடமேல் மாகாணம்

3) வடமாகாணம் 4) மேல் மாகாணம்

(6) நல்லாட்சி சமூகத்தின் சிறப்பான செயற்பாட்டுக்கு பிரசை ஒருவரிடம் இருக்க கூடாத பண்பு

1) சமத்துவத்துடன் செயற்படல்

2) பிற கலாசாரங்களை மதித்தல்

3) ஒற்றுமையாகச் செயற்படுதல்

4) தனது மதத்திற்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுத்தல்

(7) முயற்சியாண்மைக்காக வழங்கப்படும் கொடுப்பனவு

1) இலாபம் 2) வட்டி 3) வாடகை 4) சம்பளம்

(8) சமதர்மப் பொருளாதார முறை ஒன்றின் அடிப்படைப் பண்பு அல்லாதது

1) உற்பத்திக் காரணிகள் அனைத்தும் அரசுடைமையாக்கப்பட்டிருத்தல்

2) போட்டித் தன்மை வாய்ந்த சந்தை முறை நிலவுதல்

3) மத்திய திட்டமிடல் சபையின் மூலம் பொருளாதாரம் நிருவகிக்கப்படல்

4) அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் போது சமூக நன்மையைக் கருத்திற் கொண்டு செயற்படுத்தல்

(9) மோதல்கள் ஏற்படுவதற்கு அடிப்படைக் காரணிகளில் சமூகப் பொருளாதாரக் காரணிகள் அடிப்படையாக அமைந்துள்ளமைக்கு சிறந்த உதாரணம்

1) தென்னாபிரிக்காவின் இன முரண்பாடு

2) சிலுவை யுத்தம்

3) சோமாலியா எத்தியோப்பியாப் பிரச்சினை

4) இஸ்ரவேல்-பலஸ்தீன் பிரச்சினை

(10) மோதலைத் தவிர்ப்பதில் இரு தரப்பினரும் வெற்றி-வெற்றி (Win – Win Strategy) எனும் தீர்வைப் பெற்றுக் கொள்வது

1) பேச்சு வார்த்தையும் பேரம் பேசுதலும் 2) நடுநிலை வகித்தல்

3) நடுநிலையாளர்களாக செயற்படல் 4) கலந்துரையாடல்

(11) இலங்கையில் நடைமுறையிலுள்ள பொதுச் சட்டம்

1) அரசியல் யாப்புச் சட்டம் 2) உரோமன் டச்சு சட்டம்

3) குற்றவியல் சட்டம் 4) குடியியல் சட்டம்

(12) முஸ்லிம் தனியார் சட்டத்தின் கீழ் வழக்கு விசாரணைகளுக்காக முதன் முறையாக காதி நீதிமன்றம் உருவாக்கப்பட்ட ஆண்டு

1) கி.பி.1706 2) கி.பி.1806 3) கி.பி.1929 4) கி.பி.1960

(13) உயர் நீதிமன்றத்தின் அதிகாரங்கள் இரண்டினைக் குறிக்கும் விடை

A வர்த்தகப் பிணக்குகளைத் தீர்த்தல்

B பாராளுமன்றத் தேர்தல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

C ஆரம்ப மற்றும் மாவட்ட நீதிமன்றங்களின் தீர்ப்புக்களின் மேன்முறையீட்டை பரிசீலணை செய்தல்

D மக்கள் தீர்ப்பு வாக்கெடுப்பு முறைப்பாடுகளை விசாரணை செய்தல்

E பாராளுமன்ற சிறப்புரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை செய்யும் அதிகாரம்

1) Bயும் Cயும் 2) Aயும் Eயும் 3) Bயும் Dயும் 4) Dயும் Eயும்

(14) மாவட்ட நீதிமன்றங்களுக்கான நீதிபதிகளை நியமனம் செய்வதும் விலக்குவதும்

1) நீதிச் சேவை ஆணைக்குழுவினால் 2) சனாதிபதியினால்

3) நீதி அமைச்சரினால் 4) மாவட்ட நீதிமன்றத்தின் மூலம்

(15) ஒரு நபருக்கு தமது அடிப்படை உரிமை ஒன்று மீறப்பட்டால் அது தொடர்பாக முறைப்பாடு செய்ய அதிகாரம் நீதிமன்றம்.

1) மேல் நீதிமன்றம் 2) உயர் நீதிமன்றம்

3) மேன்முறையீட்டு நீதிமன்றம் 4) நீதிவான் நீதிமன்றம்

(16) நீதிச் சேவை ஆணைக்குழுவின் தலைவர்

1) சட்டமா அதிபர் 2) பிரதம நீதியரசர் 3) நீதி அமைச்சர் 4) சனாதிபதி

(17) நீதிபதியின் அதிகாரத்தையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்கு உதவியாக அமையாத அதிகாரி

1) சட்டமா அதிபர் 2) அரச சிரேஷ்ட வழக்கறிஞர்கள்

3) நீதிச்சேவை ஆணைக்குழுத் தலைவர் 4) சனாதிபதி வழக்கறிஞர்கள்

(18) காப்பாற்றும் அல்லது மீட்டும் முறை மூலம், பிரச்சினை தொடர்பாக அறிக்கை ஒன்றைப் பெற்றுக் கொடுப்பது.

1) தொழிலாளர் ஆணையாளர் மீட்பாளருக்கு வழங்குதல்

2) வழக்கறிஞரின் மூலம் பிரதம நீதியரசருக்கு

3) மீட்பாளர் மூலம் வழக்கறிஞருக்கு

4) நீதிபதி மூலம் வழக்கறிஞருக்கு

(19) மனித உரிமை ஆணைக்குழு உறுப்பினர்களின் எண்ணிக்கை

1) 20 2) 30 3) 32 4) 50

(20) சமாதான நீதிவான்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளது.

1) நீதி அமைச்சரிடம் 2) பாராளுமன்றத்திடம் 3) நீதிபதி திணைக்களத்திடம் 4) பிரதம நீதியரசரிடம்

(21) 1833 ஆம் ஆண்டின் கோல்புறூக் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின்படி சட்டவாக்கக் கழக உறுப்பினர்களின் எண்ணிக்கை

1) 06 2) 15 3) 09 4) 21

(22) பிரித்தானிய முடியின் பிரதிநிதியாக ஆளுநர் நாயகம் பதவி ஏற்படுத்தப்பட்டது

1) 1910 குறுமக்கலம் யாப்பின்படி　　2) 1921 மனிங் யாப்பின்படி

3) 1931 டொனமூர் யாப்பின்படி　　4) 1947 சோல்பரி யாப்பின்படி

(23) 1978 ஆம் ஆண்டு குடியரசு யாப்பின் மூலம் கொண்டு வரப்பட்ட பிரதான மாற்றம்

1) விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை அறிமுகம்

2) பொதுசன அபிப்பிராய வாக்கெடுப்பு அறிமுகம்

3) நிறைவேற்று அதிகாரம் கொண்ட சனாதிபதி முறை அறிமுகம்

4) மாகாண சபைகள் முறை அறிமுகம்

(24) இலங்கையில் அதிகாரப் பகிர்வு தொடர்பாக எடுக்கப்பட்ட முயற்சி

1) 1928 ஆம் ஆண்டின் டொனமூர் ஆணைக்குழு அறிக்கை

2) 1939 ஆம் ஆண்டின் மாகாண சபை கட்டளைச் சட்டம்

3) 1956 ஆம் ஆண்டு நகர சபை கட்டளைச் சட்டம்

4) 1934 ஆம் ஆண்டு கிராம சபைகள் உருவாக்குதல்.

(25) இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களிலும் பணிகளிலும் பொதுச் சேவைக்குள் உள்ளடக்கப்படாத விடயம்

1) பொது நிறுவனங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுத்தல்.

2) பொதுச் சந்தைகளை நடத்துதல்

3) பொது மக்கள் மலசலகூடங்களை அமைத்தலும் பராமரித்தலும்

4) பொது வாசிகசாலைகளை நடத்துதல்

(26) சிறு நகர சபைகள் உருவாக்கப்பட்டது

1) 1939 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின்படி

2) 1956 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின்படி

3) 1865 ஆம் ஆண்டின் நகரசபைக் கட்டளைச் சட்டத்தின்படி

4) 1934 ஆம் ஆண்டின் கட்டளைச் சட்டத்தின்படி

(27) 1978 ஆம் ஆண்டின் அரசியல் யாப்பின் பாராளுமன்றத்திற்கு உரித்தான அதிகாரம் அல்லாதது.

1) சட்டத்தைப் பிறப்பித்தல்　　2) வரவு-செலவுத் திட்டத்தை பராமரித்தல்

3) அரச சேவையை பராமரித்தல்　　4) மனக்குறைகளை எடுத்துச் சொல்லல்.

(28) 1978 ஆம் ஆண்டு அரசியல் யாப்பின்படி இலங்கை பாராளுமன்றத்தின் பதவிக் காலம்.

1) 5 வருடங்கள்　　2) 6 வருடங்கள்　　3) 4 வருடங்கள்　　4) 7 வருடங்கள்

(29) தற்போது இலங்கையில் இயங்குகின்ற மாநகர சபைகளின் எண்ணிக்கை.

1) 22　　2) 23　　3) 41　　4) 50

(30) இன்றைய இலங்கையில் நடைமுறையில் உள்ள உள்ளூராட்சி மன்றங்கள் தொடர்பான பெயர்களைத் தீர்மானிக்கும் அதிகாரம் உள்ளது.

1) பிரதம மந்திரியிடம்　　2) சனாதிபதியிடம்　　3) முதலமைச்சரிடம்　　4) விடயப் பொறுப்பு அமைச்சரிடம்

(31) பிரதேச சபை ஒன்றின் எல்லை பெரும்பாலான சந்தர்ப்பங்களில் நிர்ணயிக்கப்படுவது

1) பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பிரதேசம்

2) மாகாண சபை அதிகார எல்லைக்குள்

3) கிராம சேவைப் பிரதேசத்திற்கு உட்பட்ட பகுதி

4) நகர சபை அதிகாரப் பிரதேசம்

(32) மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றங்களின் பயன்களில் ஒன்று

1) வியாபார நிறுவனங்களை நடத்துதல்

2) நீர் வழங்குதல்

3) சுகாதாரம் மற்றும் சுத்தம் செய்யும் ஏற்பாடுகளைச் செய்தல்

4) பொதுக் குளியல் இடங்களை ஏற்படுத்துதல்

(33) அரசின் பல்வேறு படிநிலை தொடர்பாக பிரசைகளின் பொறுப்பாக அமையாதது

1) தேசிய அபிமானத்தை மேம்படுத்துதல்

2) சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டல்

3) பயனுள்ள தொழில் ஒன்றில் ஈடுபடுதல்

4) சமூகத்தில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்

(34) முதலாம் உலக யுத்தம் நடைபெற்ற காலப்பகுதி

1) கி.பி.1914 – 1918 வரை  2) கி.பி.1918 – 1926 வரை

3) கி.பி.1926 – 1939 வரை  4) கி.பி.1939 – 1945 வரை

(35) 1948 பெப்ரவரி 10 ஆம் திகதி மனித உரிமை தொடர்பான சர்வதேச பிரகடனத்தை நிறைவேற்றியது.

1) ஐக்கிய நாடுகள் சபையின் செயலகத்தினால்

2) ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையினால்

3) ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்பு சபையினால்

4) ஐக்கிய நாடுகள் சபையின் உதவி நிறுவனங்களின் மூலம்

(36) இலங்கையில் நடைமுறையில் உள்ள அரசியல் யாப்பில் அடிப்படை உரிமைகள் தொடர்பாக குறிப்பிடப்பட்டுள்ள அத்தியாயம்.

1) IVவது அத்தியாயம்  2) IIIவது அத்தியாயம்

3) Vவது அத்தியாயம்  4) XIIவது அத்தியாயம்

(37) ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் தொடர்பான பிரகடனத்தில் உள்ளடங்கியுள்ள வாசகங்களின் எண்ணிக்கை

1) 30  2) 35  3) 38  (4) 40

(38) பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமையாவது

1) அடிமைத் தன்மையிலிருந்தும் விடுபடுவதற்காக உரிமை

2) சிந்தனை செய்யவும் மனசாட்சிப்படி நடப்பதற்கும் மதத்தைப் பின்பற்றுவதற்குமான உரிமை

3) விடுமுறை மற்றும் ஓய்வு பெறுவதற்கான உரிமை

4) வெளிநாடொன்றில் புகலிடம் பெறுவதற்கான உரிமை

(39) சிறுவர் பாதுகாப்பு நான்கு பிரதான விடயங்களைக் கொண்டமைந்தவை. அவற்றைக் காட்டும் விடைத் தொகுதி.

1) உயிர் வாழுதல், பாதுகாப்பு, அபிவிருத்தி, சுகாதாரம்

2) கல்வி, சுகாதாரம், உயிர்வாழ்தல், பாதுகாப்பு

3) சுகாதாரம், பாதுகாப்பு, கல்வி, சமயம்

4) பாதுகாப்பு, உயிர் வாழ்தல், அபிவிருத்தி, பங்குபற்றுதல்

(40) "ஒருவருக்கு தனது கைத்தடியைச் சுற்றிக் கொண்டு தான் சுதந்திரத்துடன் தன் பாதையில் பயணம் செய்ய முடியும் ஆனால் அச்சுதந்திரம் அடுத்தவரின் மூக்கு நுணி வரை மட்டுமே" என்ற கூற்றைக் கூறியவர்

1) ஹரல் ஜே லஸ்கி

2) ஜீன் ஜக்சின் ரூஸோ

3) காணர்

4) A.V.டைசி

සබරගමුව පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
**சபரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்**
**Sabaragamuwa Provincial Department of Education**

| | | |
|---|---|---|
| දෙවන වාර පරීක්ෂණය | **2018** | **11** ශ්‍රේණිය |
| **இரண்டாம் தவணைப் பரீட்சை** | 2018 | **தரம் 11** |
| **Second Term Test** | **2018** | **Grade 11** |

| | | |
|---|---|---|
| **குடியியற் கல்வி** | **II** | **இரண்டு மணி** |
| පුරවැසි අධ්‍යාපනය | **II** | පැය දෙකයි |
| ***Civics*** | **II** | **Two Hours** |

## பகுதி II

**கவனிக்கவும்**

- முதலாம் வினா காட்டாயமானது.
- முதலாம் வினாவுக்கும் வேறு நான்கு வினாக்களுக்குமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

1) i. கிரேக்க நகர ஆட்சியில் மக்கள் மன்றங்களில் நிர்வாக நடவடிக்கைகளில் பங்குகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்படாத மக்கள் பிரிவினர் 2ஐக் குறிப்பிடுக.

ii. ஒற்றையாட்சி முறை நடைமுறையில் உள்ள நாடுகள் 2ஐக் குறிப்பிடுக.

iii. இலங்கையில் பன்மைப் பண்பாட்டுச் சமூகம் உருவாவதில் குடிப்பெயர்வு தொடர்பான காரணிகள் 2ஐக் குறிப்பிடுக.

iv. தெற்காசிய முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கையில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளைக் 2ஐக் குறிப்பிடுக.

v. மோதல்களை விரிவாக நோக்கும் போது பிரதான பிரிவுகள் இரண்டாக வகைப்படுத்தலாம். அவற்றைக் குறிப்பிடுக.

vi. இலங்கையில் நடைமுறையில் இருக்கின்ற வேறு வகை விஷேட சட்டங்கள் 2ஐக் குறிப்பிடுக.

vii. மாவட்ட நீதிமன்றங்களில் விசாரிக்கக்கூடிய வழக்குகள் 2ஐக் குறிப்பிடுக.

viii. 1931 ஆம் ஆண்டு டொனமூர் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்ட அரச அதிகாரிகள் இருவரைக் குறிப்பிடுக.

ix. சப்ரகமுவ மாகாணத்திற்குட்பட்ட மாவட்டங்கள் 2ஐக் குறிப்பிடுக.

x. குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் 2ஐக் குறிப்பிடுக. (10 x 2 = 20 புள்ளிகள்)

2) i. அதிகாரத்தைப் பன்முகப்படுத்துகையில் அவதானிக்கக் கூடிய இரு பிரதான இயல்புகளைக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. ஒற்றையாட்சி ஒன்றின் பொதுவான பண்புகள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. சமஷ்டி அரசொன்றின் பண்புகள் 3ஐக் குறிப்பிட்டு அதில் ஒன்றை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

3) i. உற்பத்தி தொடர்பாகப் பயன்படுத்தக்கூடிய பிரதான நுட்பமுறைகள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. பொருளாதார முறையொன்றில் இடம் பெறுகின்ற பிரதான செயற்பாடுகள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. A. முதலாளித்துவ பொருளாதார முறையின் பண்புகள் 2ஐக் குறிப்பிடுக.

B. இலங்கையின் சமகாலப் பொருளாதார முறையின் பண்புகள் 3ஐக் குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

4) i. சட்டத்தின் மூலாதாரங்கள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii. வழக்கு விசாரணைக்கான மாற்று வழிகள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. சட்டவாட்சி உறுதிப்படுத்தப்பட்ட சமூகத்தில் காணக்கூடிய பண்புகள் 3ஐக் குறிப்பிட்டு அதில் ஒன்றை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

5) i. இலங்கையில் கீழே தரப்பட்டுள்ள அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டை முறையே குறிப்பிடுப்பிடுக. (2 புள்ளிக்ள்)

A – கோல்புறூக் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்

B – மக்கலம் அரசியல் யாப்புச் சீர்திருத்தம்.

ii. சோல்பரி அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் மூலம் அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றற்கள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. A – 1972ம் ஆண்டின் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் புதிய மாற்றங்கள் 3ஐக் குறிப்பிடுக.

B – 1978ம் ஆண்டின் அரசியல் யாப்பு சீர்திருத்தத்தின் புதிய மாற்றங்கள் 3ஐக் குறிப்பிடுக.

(5 புள்ளிகள்)

6) i. மனித உரிமைகள் வெற்றி கொள்ளப்பட்ட முக்கிய வரலாற்றுச் சந்தர்ப்பங்கள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிக்ள்)

ii. மனித உரிமைகளுக்கும் அடிப்படை உரிமைகளுக்கும் இடையிலான வேறுபாட்டைச் சுருக்கமாக விளக்குக. (3 புள்ளிகள்)

iii. சிறுவர் உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் மூன்றைக் குறிப்பிட்டு அதில் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

7) i. சூழல் தொகுதியில் உள்ளடக்கியுள்ள பிரதான கூறுகள் 2ஐக் குறிப்பிடுக. (2 புள்ளிக்ள்)

ii. சூழல் தொகுதியில் இருந்து கிடைக்கும் சேவைகள் 3ஐக் குறிப்பிடுக. (3 புள்ளிகள்)

iii. நீர் மாசடைவதால் ஏற்படும் பிரச்சினைகள் 3ஐக் குறிப்பிட்டு அதில் ஒன்றை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)